# அம்பை வேல்ஸ் வித்யாலயா பள்ளி ஆண்டு விழா



**தென்காசி,ஏப்.28-**

அம்பாசமுத்திரம் வேல்ஸ் வித்யாலயா பள்ளியில் பத்தாம் வருட ஆண்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தமிழ் பாடல் ஆசிரியர் மதன் கார்க்கி இசையமைப்பாளர் பரத்வாஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர், இந்தக் கல்வி ஆண்டில் பல்வேறு சாதனைகள் புரிந்த மாணவ மாணவியர்கள், கடந்த வருடங்களில் நீட் தேர்வில் சாதனை புரிந்து மருத்துவ படிப்பில் படித்து வரும் முன்னாள் மாணவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இசையமைப்பாளர் பரத்வாஜ் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கபட்டது. மேலும் பாடல் ஆசிரியர் மதன் கார்த்தி அவர்களால் நிறுவப்பட்டு நடத்தி வரப்படும் தம்பா தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக வேல்ஸ் பள்ளி மாணவர்களுக்கு விஞ்ஞான பூர்வமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் தமிழை எளிய முறையில் கற்பதற்கான பயிற்சி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது, இதன் மூலம் தமிழின் தொன்மைகள், மேன்மைகள் குறித்தும் மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ள முடியும் என்றும் இந்த பயிற்சி முறை தென் மாவட்டங்களில் முதன் முதலாக வேல்ஸ் வித்யாலயா பள்ளியிலேயே அறிமுகப்படுத்தப்படுவதாக மதன் கார்க்கி அவர்கள் தெரிவித்தார், மேலும் விழாவில் சூப்பர் சிங்கர் புகழ் அக்ஷரா லட்சுமி மற்றும் கொரிய நாட்டை சேர்ந்த பாப் பாடகர் ஆரா உள்ளிட்டோருடன் இணைந்து வேல்ஸ் பள்ளி மாணவர்கள் இனந்து ஒரே மேடையில் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர், பள்ளியில் ஐந்து ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் தங்க காசு பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழாவில் வேல்ஸ் வித்யாலயா பள்ளி குழுமத்தின் தலைவர் முத்துசாமி செயலர், நாகமுத்து ,செந்தில் பிரகாஷ் பள்ளியின் தாளாளர் வீரவேல் முருகன் இயக்குனர் ராஜராஜேஸ்வரி செயல் இயக்குனர் சிவராஜ் பாண்டியன் டீன் நாக ஸ்ரீனிவாசன் பள்ளி முதல்வர் சக்திவேல் முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சண்முகசுந்தரம் நினைவேந்தல்



**தென்காசி ஏப். 28:**

முன்னாள் நகர்மன்றத் துணைத் தலைவர் உயர்திரு ஏ.பி. எஸ். சண்முகசுந்தரம் ஐந்தாவது நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு விழா மதுரம் மினி அரங்கில் வைத்து நடைபெற்றது.

நிகழ்விற்கு பணி நிறைவு வனச்சரக அலுவலர் பொன்ராஜ் தலைமை தாங்கினார். தொழிலதிபர் ராதாகிருஷ்ணன் ,

முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவர் சண்முகசுந்தரம் வரவேற்றார். தெற்குமாவட்ட செயலாளர் ஜெயபாலன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முன்னாள் நகர கழக செயலாளர் ஏ.பி.எஸ் . சண்முகசுந்தரம் படத்தினை திறந்து வைத்து வரும் ஆண்டுகளில் மாவட்ட கழகம் சார்பில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவியுடன் இவ்விழா மேலும் சிறப்பாக நடைபெறும் எனக் கூறினார். தென்காசி நகர்மன்றத் தலைவர் சாதிர் மலரஞ்சலி செலுத்தி அவர் ஆற்றிய கட்சி மற்றும் நகர்மன்ற வளர்ச்சி பணிகளை நினைவு கூர்ந்தார். அவரது காலத்தில் அவரோடு பயணித்த கழக முன்னோடிகளான ஆயன் நடராஜன், தெட்சினா மூர்த்தி, சேக் பரீத், பத்திரிக்கையாளர் முத்துசாமி, ஓய்வூதியர் சங்கம் சேக் சலீம் , ஆசிரியர்கள் பிச்சைக்கனி, சுரேஷ்குமார், பிரேம், செய்யது இப்ராகிம் , திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம் மணிமாறன் ,பாலன்,வழக்கறிஞர் ஐயப்பன்,தலைமை ஆசிரியர்கள் பாலமுருகன் , ராமமூர்த்தி இளைஞரணி பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர். முன்னதாக அன்னாரின் புதல்விகள் ஜெயந்தி , கீதா, வெண்ணிலா, மனைவி அருணாசலத்தம்மாள், மருமகள் மகேஸ்வரி உட்பட பலர் இணைந்து குத்து விளக்கு ஏற்றினர். ஆசிரியர் பிச்சையா நன்றி கூறினார். ஏற்பாடுகளை புதல்வரும் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவருமான ஆசிரியர் ஐயப்பன் செய்திருந்தார்.

<u>கடையநல்லூரில்</u>

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் முப்பெரும் விழா



**தென்காசி ஏப்.28:**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டாரம் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் பணி நிறைவு பாராட்டு விழா, நல்லாசிரியருக்கு பாராட்டு விழா தென்காசி மாவட்டத்தில் சிறந்த பள்ளிக்கான கேடயம் பெற்ற பள்ளி பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழா மேலக்கடையநல்லூர் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கடையநல்லூர் வட்டார தலைவர் ஆறுமுகசாமி தலைமை வகித்தார். . தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தென்காசி மாவட்ட தலைவர் ஆரோக்கிய ராசு, மேனாள் மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், மாநில செயற்குழு உறுப்பினர் மருது பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் அப்துல் காதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கடையநல்லூர் வட்டார செயலாளர் ரமேஷ் அனைவரையும் வரவேற்று பேசினார்.இவ்விழாவில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் பூ பாண்டிபுரம் தலைமை ஆசிரியை சந்திராள், சொக்கம்பட்டி இந்து தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் சண்முகத்தாய், ஆர்.சி தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் ஸ்டெல்லா பாக்கிய மேரி, கடையநல்லூர் இதயத்துல்லா பள்ளி ஆசிரியை பாத்திமாஆகியோரின் பணி நிறைவை பாராட்டியும், தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற துரைச்சாமிபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மீனாட்சியை பாராட்டியும், தென்காசி மாவட்ட அளவில் சிறந்த பள்ளிக்கான தமிழக அரசின் கேடயம் பெற்ற ஆனைகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் மோதிலால் மற்றும் ஆசிரியர்களை பாராட்டியும் ,நல்லாசிரியர் ரசூல் அகமது இப்ராஹிம், உஸ்மான்,

மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கண்ணன், மேனாள் தலைமை ஆசிரியர் செந்தூர்பாண்டியன், வருவாய் ஆய்வாளர் மனோகர், பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார், துரைசாமிபுரம் பள்ளி நிர்வாகி ஜெயபிரகாஷ், தலைமை ஆசிரியர் ஆனந்த் தலைமையாசிரியர் தேவதாசன், வட்டார பொறுப்பாளர்கள் குமாரவேல் முத்துலட்சுமி சிவசங்கர் ரவிச்சந்திரன், மகேந்திரன் சுதாகரன் முத்துராமலிங்கம் அசோகன் ஆரோக்கியமேரி மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கி பேசினர். இறுதியில் கடையநல்லூர் வட்டாரம் சார்பில் பணிநிறைவு ஆசிரியர்கள் நல்லாசிரியர் ,மற்றும் சிறந்த பள்ளிக்கு ஏர் கூலர் நினைவு பரிசும் தென்காசி மாவட்ட அமைப்பின் சார்பாகவும் நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. விழா இறுதியில் வட்டார பொருளாளர் குமரேசன் நன்றி கூறினார்.விழா நிகழ்ச்சிகளை ஆனைகுளம் பள்ளி தலைமை ஆசிரியர் மோதிலால் தொகுத்து வழங்கி பேசினார். விழாவிற்கான ஏற்பாடுகளை கடையநல்லூர் வட்டார பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## 3 ஜி கரைசல் செயல்முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கிய வேளாண் மாணவர்கள்



**தென்காசி ஏப்.28:**

கிராமப்புற வேளாண் பயிற்சி அனுபவ திட்டத்தின் கீழ் கிள்ளிகுளம் வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் அம்பை வட்டாரம் ஊர்க்காடு கிராமத்தில் 3ஜி கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இஞ்சி , பூண்டு, பச்சை மிளகாயை அரைத்து கோமியம் அல்லது நீரில் ஒருநாள் ஊறவைத்து வடிகட்டி ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50 மில்லிலிட்டர் வீதம் கலந்து பயிர்களுக்கு தெளிப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் நாவாய் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் எனவும் விளக்கினர்.நெல் , உளுந்து மற்றும் காய்கறி பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த மிகவும் எளிமையான ஒரு இயற்கை பூச்சி விரட்டியான 3ஜி கரைசல் தயாரிப்பு குறித்த சந்தேகங்களை விவசாயிகள் கேட்டு தெளிவு பெற்றுக் கொண்டனர்.இம்மாணவர்கள் கல்லூரி முதல்வர் முனைவர் தேரடிமணி மற்றும் பேராசிரியர்கள் முனைவர் காளிராஜன், முனைவர் . இளஞ்செழியன், முனைவர். ரஜினிமாலா ஆகியோரின் வழிகாட்டலின்படி செயல்பட்டு வருகின்றனர்

<u>கோவில்பட்டி அருகே</u>

# தலைமை ஆசிரியருக்கு பணி நிறைவு பாராட்டு விழா



**கோவில்பட்டி ஏப் 28**

கோவில்பட்டி அருகே கரிசல்குளம் அரசு ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் சுப்புத்தாய் என்பவருக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடந்தது. இந்நிகழ்ச்சியில் கரிசல்குளம் கிராம பஞ்சாயத்து தலைவி சரோஜா பால்ராஜ் தலைமை தாங்கினார். வார்டு உறுப்பினர் சுப்புலட்சுமி முன்னிலை வகித்தார். பள்ளியின் ஆசிரியை நிர்மலா அனைவரையும் வரவேற்றார். கோவில்பட்டி அரசு ஓய்வூதியர் சங்க பொருளாளர் விஜயன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பால்ராஜ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். பள்ளி மேலாண்மை குழு தலைவி ஆஷா உறுப்பினர்கள் மல்லிகா, மகாலெட்சுமி, ராதிகா, பேபி லதா. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சுப்புராஜ், மாரிச்செல்வம், முத்துமாரியம்மன் பழைய மாணவர் சங்க தலைவர் ராமச்சந்திரன், செயலர் புதியராஜ், பொருளாளர் பாரதி ஆகியோர்கள் இருபத்து ஐந்து ஆண்டு காலம் சிறப்பாக கல்வி சேவை புரிந்து பணி நிறைவு பெற்ற தலைமை ஆசிரியை சுப்புத்தாய் அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள். தலைமை ஆசிரியை தன் சொந்த செலவில் நாற்பது ஆயிரம் ரூபாய் பெறுமான பரிசு பொருட்களை மாணவ மாணவிகள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உட்பட எழுபத்தைந்து பேர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை கரிசல் குளம் ஊர் பொதுமக்கள் செய்து இருந்தனர்.

# கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் கிராமப்புற வேளாண் பயிற்சி



**தென்காசி ஏப்.28 :**

கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி இளங்கலை இறுதி ஆண்டு மாணவிகள் அன்னபூரணி, பூமிகா, மகா சுபிக் ஷா, பிரீத்தி சுஜா, ராதிகா, ரஞ்சனி, ஸ்ரீ காயத்ரி பிரியங்கா, ஸ்ரீநிதி, சுபேகா ஆகியோர் பத்தமடையில் தங்கியிருந்து கிராமப்புற வேளாண் பயிற்சி அனுபவங்களை பெற்று வருகின்றனர். இதன் ஒருபகுதியாக உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. விவசாயிகள் தங்களது நெல் விதைகளை உயிர் உரம் கொண்டு நேர்த்தி செய்தால் 10 முதல் 25 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்கும். ரசாயன உரத்தின் தேவை 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறையும். விதை முளைக்கும் திறனே ஒரு பயிரின் விளைச்சலுக்கு ஆதாரமாக விளங்குகிறது. 50 மில்லி திரவ உயிர் உரத்தை (அசோஸ்பைரில்லம்) தேவையான அளவு ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கான விதையுடன் கலந்து 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்கவும். மேலும் நெல் விதைகளை தரமானதாக தேர்வு செய்யும் முறை குறித்தும், உயிர் உரம் கொண்டு நெல் விதை நேர்த்தி செய்வது குறித்தும் செயல்விளக்கம் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்



**தென்காசி தெற்கு மாவட்டம் திருச்சிற்றம்பலம் அருள்மிகு முப்புடாதி அம்மன் திருக்கோவில் கொடை விழா அன்னதான நிகழ்ச்சிக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே. ஜெயபாலன் நன்கொடை வழங்கினார்.**

# கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு ஆணை: அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்



**தூத்துக்குடி.ஏப்.28-**

விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 716 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கான வேலை உத்தரவினை அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம், மற்றும் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கான வேலை உத்தரவினை புதூர் தனியார் திருமண மண்டபம் மற்றும் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 716 பயனாளிகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் பயனாளிகளுக்கு வழங்கினார். விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்மார் கண்டேயன் தலைமைத்தார்.

நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடாசலம், விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் ரஞ்சித், தங்கவேல், விளாத்திகுளம் வட்டாட்சியர் ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், ராமசுப்பு, அன்புராஜ் சின்னமாரிமுத்து, பொதுகுழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, பாண்டியராஜன், புதூர் பேரூர் கழக செயலாளர் மருதுபாண்டியன், புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

<u>வேலப்பநாடாரூர் மற்றும் திருமலாபுரம் கிராமங்களில்</u>

# புதிய நியாய விலை கடை அமைக்க அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி: ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



**சங்கரன்கோவில். ஏப்.28.**

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேல நீலதநல்லூர் ஒன்றியம் சேர்ந்தமரம் மஜரா ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திருமலாபுரம்மற்றும் வேலப்பநாடாரூர் கிராமங்களில் தலா 16 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை அமைக்க அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்து புதிய கட்டிடங்கள் கட்டும் பணியை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதில் ஒன்றியசெயலாளர் ராமச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் செண்பக கனி, ரவி, மாவட்ட பிரதிநிதி முத்துசாமி, கிளைகழகச் செயலாளர்கள் முருகன் , செல்லப்பா ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்லத்துரை, வினுசக்கரவர்த்தி, ராஜேந்திரன் மாணவர் அணி நிரஞ்சன்,ஆரோக்கியசேவியர், வர்த்தக அணி சிற்றரசு, கருப்பையா, அய்யாசாமி , சுற்றுச்சூழல் அணி அகஸ்டின், அமல்ராஜ், கிளை கழக நிர்வாகிகள் கடற்கரைச்சாமி, சிவசக்தி, செல்வராஜ், கன்னிமகராஜ், வெளியப்பன் ,ஜேபிஆர் மணி, இளைஞர் அணி அமைப்பாளர் சரவணன், சந்தனகுமார், மகராஜன், செல்லத்துரை, பொன்னுச்சாமி, கவுன்சிலர் சுந்தரிகிருஷ்ணசாமி, மகளிர் அணி பெல்ஸ்,அகஸ்டின், சக்தி, மற்றும் பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

<u>கடையநல்லூரில்</u>

# மக்கள் இயக்கம் சார்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி: நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது




**தென்காசி ஏப்.28**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட 33 வது வார்டு தூய்மைநகரங்களுக்கான மக்கள் இயக்கம் சார்பாக நடைபெற்ற எனது குப்பை எனது பொறுப்பு மற்றும் நெகிழி இல்லா நகரங்களை ஏற்படுத்துதல் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சி கடையநல்லூர் நகரமன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர்ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடையநல்லூர் நகராட்சி சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர், சுகாதார ஆய்வாளர்கள் சிவா,மாதவன்ராஜ் , 33 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் செய்யதலி பாத்திமா, கழகத் தோழர்கள் ,வார்டு பொதுமக்கள், துப்புரவு, தூய்மை பணியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்

இறுதியில் பொது மக்களுக்கு இயற்கை உரம் வழங்கப்பட்டது

# ரகளையில் ஈடுபட்ட 4 பேர் கைது

**தூத்துக்குடி.ஏப்.28-**

தூத்துக்குடி தாளமுத்து நகர் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் சங்கலிங்கம் தலைமையிலான போலீசார் வடக்கு சோட்டையன்தோப்பு பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது ஆயுதங்களுடன் ரகளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 4 பேரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை நடத்தினர்.அவர்கள் கோவில்பிள்ளை விளையைச் சேர்ந்த வெற்றிவேல் மகன் இசக்கி ராஜா (33), லைஞர் நகர் முனியசாமி மகன் சிவலிங்கம் என்ற சிவா (22), மட்டக்கடை ஜெகன் மகன் அல்டிரின் (20), சமர் வியாஸ் நகரை சேர்ந்த ஆல்பர்ட் ஜான் டேனியல் மகன் அந்தோணி ராஜ் (24) என்பது தெரியவந்தது. பின்னர் 4 பேரையும் போலீசார் கைது செய்தனர் அவர்களிடமிருந்து 2 அரிவாள், 2 வாள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# துணை வேந்தர்கள் மாநாட்டை கூட்டுவதற்கு ஆளுனருக்கு அதிகாரம் கிடையாது: சி.பி.எம்.மாநில செயலாளர் பேச்சு



**தூத்துக்குடி.ஏப்.28-**

துணை வேந்தர்கள் மாநாட்டை கூட்டுவதற்குஆளுனருக்கு அதிகாரம் கிடையாது என சிபிஎம் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கூறினார்.

தூத்துக்குடி மாசிலாமணி புரத்தில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. அந்த பயங்கரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், அந்த தாக்குதலுக்கு ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு எதிராக மத்திய அரசு அரசியல் செய்கிறது. இதற்காக பாகிஸ்தானில் இருந்து மருத்துவத்திற்காக வந்த மக்களை திருப்பி அனுப்புவது, சிந்து நதி நீரை வழங்க மறுப்பது என்பது தவறான அணுகுமுறையாகும்.

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டை கூட்டுவதற்கு மாநில ஆளுநருக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு மட்டுமே இந்த மாநாட்டை கூட்டுவதற்கு அதிகாரம் உள்ளது. இந்த மாநாட்டை அரசு பல்கலைக்கழக துணை வேந்தர்கள் உள்பட தனியார் பல்கலைக்கழக துணைவேந்தர்களும் புறக்கணித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் மூலம் அது தோல்வி அடைந்துள்ளது என்றே கூறலாம்.

தமிழக ஆளுநர் அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், உள்நோக்கத்துடனும் செயல்படுகிறார் என உச்சநீதிமன்றம் குற்றம் சாட்டிய பின்னரும் அவர் தனது பதவியை ராஜிநாமா செய்யாமல் உள்ளார். எனவே, ஆளுநர் பொறுப்பில் இருந்து ஆர்.என்.ரவியை மத்திய அரசு நீக்க வேண்டும்.பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வக்ப் திருத்தச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. எனவே, இஸ்லாமியர்களுக்கு எதிராகவும், மதச் சுதந்திரத்திற்கு எதிராகவும் கொண்டுவரப்பட்டுள்ள இந்த திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும்.தூத்துக்குடி என்டிபிஎல் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஊதிய விவகாரத்தில் உயர் நீதிமன்ற தீர்ப்பை நிர்வாகம் அமல்படுத்த வேண்டும். இது குறித்து தொழிலாளர்களிடையே நிர்வாகம் பேசி சுமுகத் தீர்வு காண வேண்டும்.

தனியார் நிதி நிறுவனங்கள் மக்களிடம் கடனை வலுக்கட்டாயமாக வசூலித்தால் பிணையில் வெளியே வரமுடியாத வகையில் சிறை தண்டனை விதிக்கப்படும் என தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட மசோதாவை வரவேற்கிறோம்.கச்சத் தீவை மீட்பது தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்துள்ள வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அந்த வழக்கை விரைந்து நடத்தி சட்டபூர்வமாக கச்சத் தீவை மீட்க வேண்டும். ஒருவர் அமைச்சராக இருப்பதற்கும், அவருக்கு ஜாமீன் வழங்குவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வழங்கியது தொடர்பாக உச்ச நீதிமன்றம் கூறிய கருத்து ஏற்புடையது அல்ல.தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்கள் நடமாட்டத்தை தடுக்க, அதை விற்பனை செய்பவர்கள் மீதும், அதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் மீதும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.வளர்ந்து வரும் சுற்றுலாத்தலமாக திருச்செந்தூர் உள்ளதால், சென்னையில் இருந்து திருச்செந்தூருக்கு நேரடியாக கூடுதலாக ஒரு ரயில் இயக்க வேண்டும் என்ற கனிமொழி எம்.பி.யின் கோரிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். இந்தக் கோரிக்கையை ரயில்வே துறை விரைந்து நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகையை அரசு விரைந்து வழங்க வேண்டும்.கடந்த 2021ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் முழுமையாக திமுக நிறைவேற்ற வேண்டும். மேலும், காலிப் பணியிடங்கள் நிரப்ப வேண்டும். வரும் 10 மாத காலத்திற்குள் இதனை செய்தால் தான், வரும் 2026 தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கும் என்றார். மாவட்டச் செயலர் கே.பி.ஆறுமுகம், மாநிலக் குழு உறுப்பினர் அர்ஜுனன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கோவில்பட்டி திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் ஆய்வு பொழிவு



**கோவில்பட்டி ஏப் 28**

கோவில்பட்டி திருவள்ளுவர் மன்றத்தின் 54 ஆம் ஆண்டு திங்கள் ஆய்வு சொற்பொழிவு திருவள்ளுவர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது. மருத்துவர் சீனிவாசகன் தலைமை தாங்கினார். எழுத்தாளர் உரத்த சிந்தனை கவிஞர். சிவானந்தம் முன்னிலை வகித்தார். மன்றச் செயலாளர் நம்.சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கரன்கோவில் மேனிலைப்பள்ளி ஆசிரியர் சங்கரராமன் நாட்டுப் புறப்பாடல்கள் காட்டும் சமூகப் பார்வை என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தமிழ்ச் செம்மல் ஜான் கணேசு, கலைமாமணி அமல புஷ்பம், தேசிய நல்லாசிரியை விநாயக சுந்தரி ஆகியோர் கருத்துரை வழங்கினர். மன்றத்தலைவர் தமிழ்ச் செம்மல் கருத்தப்பாண்டி நன்றியுரையாற்றினார். மாணவ - மாணவியர்க்கு திறன் பரிசுகள் வழங்கப்பட்டன. திரளான இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். திருவள்ளுவர் மன்ற நிறுவனர் அறிஞர் சங்கரலிங்கம் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்த பட்டது. நிகழ்ச்சியை மன்ற செயலாளர் நம். சீனிவாசன் மிகச் சிறப்பாக செய்திருந்தார்.



**தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பாக வீரகேரளம் புதூரில் கலைஞர் நீர்மோர் பந்தலை தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் திறந்து வைத்தார் உடன் தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன் தலைமை செயற்குழு ஜேசுராஜன்,ஒன்றிய செயலாளர் சீனித்துரை, இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, மாணவர் அணி அமைப்பாளர் ஜே கே ரமேஷ் ,மாவட்ட பிரதிநிதி பொன் செல்வன் கலந்து கொண்டனர்.**

இலஞ்சி திருவிலஞ்சிக்குமாரர் ஆலயத்தில்

# ஈசர்க்கினியாள் சமேத இருவாலுக ஈசருக்கு சித்திரை திருவிழா

## வரும் 1-ந் தேதி தொடங்கி 10 நாட்கள் நடக்கிறது

**தென்காசி ஏப்.28:**

தென்காசி மாவட்டத்தில் புகழ்பெற்ற அருள்மிகு திருவிலஞ்சிக்குமாரர் திருக்கோவிலில் அருள்மிகு இருவாலுக ஈசர்க்கினியாள் சமேத இருவாலுக ஈசருக்கு சித்திரை திருவிழா ஆண்டுதோறும் மிக விமரிசையாக நடைபெறும். அதே போல் இந்த ஆண்டு வரும் மே 01 முதல் மே.10 வரை சித்திரை பெருந்திருவிழா நடைபெறுகிறது. மே.01 காலை 5 மணிக்கு மேல் 8 மணிக்குள் கொடியேற்றம் நடைபெறுகிறது. நாள்தோறும் சிறப்பு அலங்காரம், தீபாராதனையுடன் சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

வரும் 8ம் தேதி காலை 9 மணிக்கு நடராஜர் பச்சை சாத்தி, வெள்ளி சப்பரம், பூங்கோவில் சப்பரம் நிகழ்ச்சியும் காலை 10மணிக்கு சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சியும் காலை 11 மணிக்கு சிறப்பு அபிஷேகம்,சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். மே.09 காலை 9 மணிக்கு திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இரவு 7 மணிக்கு தீபாராதனை, சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சி, ஏக சிம்மாசன வாகனத்தில் திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெறுகிறது. மே10ம் தேதி காலை 10.30 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் தீர்த்தவாரி, தீபாராதனை பல்லக்கு வீதி உலா நிகழ்ச்சியினை தொடர்ந்து சுவாமிக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

இரவு 7 மணிக்கு தீபாராதனை, சுவாமி திருவீதி உலா, பஞ்ச மூர்த்தி எழுந்தருளல் மற்றும் மூஷிகம், வெள்ளி மயில் வாகனம், ரிஷப வாகனத்தில் திருவீதி உலா நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினரும் மண்டகபடிதாரர்களும் செய்திருக்கின்றனர்.

# தூத்துக்குடி சிவன் கோவிலில் ராகு-கேது பெயர்ச்சி விழா



**தூத்துக்குடி.ஏப்.28-**

தூத்துக்குடி சிவன் கோவிலில் ராகு கேது பெயர்ச்சி விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பரிகாரம் செய்தனர்.

தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அன்னை ஸ்ரீ பாகம் பிரியாள் உடனுறை அருள்மிகு ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோவில் என்று அழைக்கப்படும் சிவன் கோவிலில் ராகு கேது பெயர்ச்சி விழா இன்று மாலை 4.45 மணிக்கு நடந்தது. ராகு பகவான் மீன ராசியிலிருந்து கும்ப ராசிக்கும் கேது பகவான் கன்னி ராசியில் இருந்து சிம்ம ராசிக்கும் பெயர்ச்சி அடைந்தனர்.

இதை முன்னிட்டு கேது பகவானுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. பின்னர் தீபாரணை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து காண்டனர். ரிஷபம், மிதுனம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம், தனுசு ராசியைச் சேர்ந்த பக்தர்கள் தேங்காய் பழம் எள்ளு தானமாக கொடுத்து பரிகாரம் செய்தனர். பின்னர் சனி பகவானுக்கு எள்ளு எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றி வழிபட்டனர். பூஜைகளை சண்முகம் பட்டர் நடத்தினார்.

# சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார்



**ஊட்டி, ஏப்.28-**

நீலகிரி மாவட்டம், சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம் மற்றும் பைக்காரா நீர் மின் நிலையம் ஆகிய மின் நிலையத்தினை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

முதலாவதாக சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம் மற்றும் பைக்காரா நீர் மின் நிலையம் ஆகிய மின் நிலையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு மேற்கொள்ளப்படும் மின் உற்பத்திதிறன் மற்றும் அதன் செயல்பாடுகள் தொடர்பாக துறைச்சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

பின்னர், ஊட்டி காமராஜ்சாகர் அணை மற்றும் கிளன்மார்கன் அணை ஆகிய அணைகளை நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வுகளின் போது, உதவிபொறியாளர்கள் பைக்காரா இறுதி நிலை நீர்மின் நிலையம் பாலாஜி (இயக்கம்), சிங்காரா இறுதி நிலை நீர்மின் நிலையம் ராமலிங்கம் (மின்னியில்), பைக்காரா ஆணை சிந்துஜா (கட்டடவியல்) உட்பட பலர் உடனிருந்தனர்.

# எஸ்பிஐ கட்சியின் தலைமைத்துவ பயிற்சி முகாம்: திரளானோர் பங்கேற்பு



**தென்காசி ஏப்.28:**

தென்காசி மாவட்ட எஸ்எபிஐ கட்சியின் சார்பில் நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம் வடகரையில் வைத்து நடைபெற்றது. முகாமிற்கு மாவட்ட தலைவர் திவான் ஒலி தலைமை தாங்கினார். மாவட்ட பொதுச் செயலாளர் செய்யது மஹ்மூத், மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் ஷேக் முகம்மது ஒலி, மாவட்ட செயலாளர் சீனா, சேனா சர்தார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் அஸ்கர் அலி, பரக்கத் நிஷா வேளாண் அணி மாவட்ட பொறுப்பாளர் முகம்மது காசிம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் சிறப்பு விருந்தினராக மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜாபர் அலி உஸ்மானி, நெல்லை மாநகர் மாவட்ட தலைவர் அப்துல் கனி, மதுரை தெற்கு மாவட்ட துணைத்தலைவர் வழக்கறிஞர் அபுதாஹிர் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் நிர்வாகிகளுக்கு வகுப்பெடுத்தனர். மாவட்ட துணைத்தலைவர் முகம்மது நைனார் நன்றி கூற முகாம் இனிதே நிறைவுற்றது.முகாமில் நகர, கிளை நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம்: திரளான பக்தர்கள் பங்கேற்பு

**தூத்துக்குடி.ஏப்.28-**

ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் சுவாமி கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் சுவாமி கோவிலில் சித்திரை திருவிழா கடந்த 18-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் காலையில் தோளுக்கினியானில் வீதி புறப்பாடு நிகழ்ச்சி, திருமஞ்சனம், தீர்த்தவாரி, தினமும் மாலையில் சிம்ம வாகனம், அனுமார் வாகனம், ஷேச வாகனம், யானை வாகனம், உள்ளிட்ட வாகனங்களில் சுவாமி வீதிஉலா வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் 9-ம் நாளான நேற்று நடந்தது. இதையொட்டி அதிகாலை 5.30 மணிக்கு கள்ளபிரான் சுவாமி, பெருமாள் கொடிமரம் சுற்றி எழுந்தருளி, 6 மணிக்கு மேல் சுவாமி கோவிலில் இருந்து புறப்பட்டு வந்து திருத்தேரில் எழுந்தருளினார். காலை 9 மணிக்கு தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். கோவில் ஸ்தத்தார் ராஜப்பா வெங்கடாச்சாரி தேர் இழுக்கும் பொதுமக்களுக்கு வழிகாட்டினார்.

அப்போது தேரை இழுக்கும் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் கோவிந்தா கோபாலா என கூறியவாறு தேரை வடம் பிடித்து இழுத்து சென்றனர். தேரானது தெற்கு முத்தாரம்மன் கோவில் தெரு, பழைய தாலுகா அலுவலகம், தேவர் சிலை சாலை, தபால் நிலையம் சாலை வழியாக மதியம் 1 மணியளவில் கள்ளபிரான் கோவில் முன்பு வந்து சேர்ந்தது. அங்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை 3.30 மணியளவில் கோவில் முன்பிருந்து மீண்டும் புறப்பட்ட தேரானது பேருந்து பணிமனை சாலை, அஞ்சிலாம் தெரு வழியாக மாலை 6.30 மணிக்கு மீண்டும் தேர் நிலையத்தை வந்து அடைந்தது. பின்னர் சுவாமிக்கு சிறப்பு தீபாராதனை, இரவு 9 மணிக்கு பல்லக்கில் தவழ்ந்த கிருஷ்ணன் திருக்கோலத்தில் பெருமாள் வீதி புறப்பாடு நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சார்பில் குண்டுதோல் மந்தில் புதுப்பிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைப்பு




ஊட்டி, ஏப்.28-

ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சார்பில் குண்டு தோல் மந்தில் புதுப்பிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், ஊட்டியருகே லவ்டேல் பகுதியில் அமைந்துள்ளது குண்டு தோல் மந்து எனும் தோடர் பழங்குடியினர் வசிக்கும் கிராமம்.

இங்குள்ள இன்பவள்ளி, நேப்ராணி ஆகியோரின் வீடுகள் மிகவும் பழுதடைந்து கதவுகள் இல்லாமலும், மேல்கூரை பெயர்ந்தும்; வசிக்க முடியாத வகையில் இருந்துள்ளது. இதனை கண்ட

ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சங்க தலைவர் ஆர்க்கிடெக் பொறியாளர் சச்சிதானந்தன், சங்க நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து அந்த இரண்டு வீடுகளை புதுப்பித்து வழங்க தீர்மானித்தனர். அதனையடுத்து அந்த வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, மின்சார வசதி ஏற்படுத்தி, தரை செப்பனிடப்பட்டு அனைத்தும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டன. அந்த வீடுகளை பயனாளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

சங்க தலைவர் சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரோட்டரி 3203 மாவட்ட கவர்னர் டாக்டர் சுரேஷ்பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வீடுகளை திறந்து வைத்து, பயனாளிகளிடம் சாவிகளை வழங்கி பேசியதாவது-ரோட்டரி மாவட்டம் 3203ன் கீழ் 101 கிளப்கள் உள்ளன. இதன் மூலம் பழங்குடியினர்களின் முன்னேற்றம், புற்றுநோய் விழிப்புணர்வு உள்ளிட்ட தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருகிறோம்.

எனவே இதுபோன்று இதர பழங்குடியின மக்களுக்கு ஏதாவது தேவைப்படின் கோரிக்கை வைத்தால் நிறைவேற்றித்தரப்படும் என்றார்.

இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்ட பொது செயலாளர் வழக்கறிஞர் ஜெயராமன், ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சங்க செயலாளர் லீனா ராஜேஷ், பொருளாளர் சீனிவாச ராவ், திட்ட தலைவர் பேராசிரியர் கோபால், சங்க உறுப்பினர்கள் கீதா சீனிவாசன், டாக்டர் பாலசுப்பிரமணியம், ஸ்டீபன், ஆடிட்டர் ராம்ஜி, ஆனந்தி சந்திரன், வருங்கால தலைவர் ரஞ்சித், ரோட்டரி சங்கத்தினர், தோடர் இன மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து சங்க தலைவர் சச்சிதானந்தன் கூறுகையில் கடந்த 10 மாத காலத்தில் பல்வேறு மருத்துவ முகாம், ரத்ததான முகாம்கள் போன்ற பிராஜக்ட்களை செய்துள்ளோம் என்றார்.

# படிப்பறிவு பகுத்தறிவு குறித்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வேளாண் மாணவிகள் விழிப்புணர்வு



**தென்காசி ஏப்.28:**

வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கிள்ளிக்குளத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவிகள் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டாரத்தில் தங்கி கிராமப்புற வேளாண் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். வேளாண் மாணவிகள் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி முதல்வர் பழனி செல்வம் தலைமையில் பதினொன்றாம், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவிகளுக்கு படிப்பறிவும், பகுத்தறிவும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் காயத்திரி, மஞ்சரி, மதுமிதா, மோனிஷா, நந்தினி, சங்கவி, சங்கரி, சஞ்சனா ஆகியோர் பள்ளி மாணவிகளுக்கு பன்னிரெண்டாம் வகுப்பிற்கு மேல் உள்ள படிப்பு வாய்ப்புகள், தன்னம்பிக்கை, சுய ஒழுக்கம், தேர்வு நேரங்களில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், நல்ல உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் வேளாண்மைக் கல்லூரியில் சேர்வதற்கான வழிமுறைகள் போன்ற தலைப்புகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் தங்களது அனுபவங்களையும் மாணவிகளிடம் பகிர்ந்து கொண்டனர். இடையிடையே சிறு சிறு விளையாட்டுகள் நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தூத்துக்குடியில் மீன்கள் விலை உயர்வு: மீனவர்கள் மகிழ்ச்சி

**தூத்துக்குடி.ஏப்.28-**

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடித் துறை முகத்தில் மீன்களை வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியது. இதனால் மீன்கள் விலை உயர்ந்திருந்தது.

மீன்களின் இனப்பெருக்கக் காலத்தை முன்னிட்டு, விசைப்படகு மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக்காலம் அமலில் உள்ளது. இதனால், நாட்டுப் படகு, பைபர் படகுகள் மூலமே மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இந்நிலையில், தூத்துக்குடி திரேஸ்புரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்குச் சென்ற ஏராளமான நாட்டுப்படகு, பைபர் படகுகள் சனிக்கிழமை கரைதிரும்பின.விடுமுறைக் காலம் என்பதால், மீன்களை வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியது. இதனால், மீன்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. சீலா மீன் கிலோ ரூ. 1,300 முதல் ரூ. 1,500 வரை விற்பனையாகியது. விளைமீன், ஊழி, பாறை ஆகியவை ரூ. 600, நண்டு ரூ. 800, கேரை ரூ. 250, சூரை ரூ. 150 என விற்பனையாகின. சாளை மீன் ஒரு கூடை ரூ. 2,200 வரை விற்பனையானது. விலை அதிகமிருந்தாலும் வியாபாரிகளும், பொதுமக்களும் போட்டிபோட்டு மீன்களை வாங்கிச் சென்றனர். அதிக விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

